


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் சார்பில், 14.30 ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் சுமார் 1,200 பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் கட்டப்படவுள்ள ஊழியர் குடியிருப்பு கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு.பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மதுரை மாநகராட்சியில் கரிமேட்டில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பினாகிள் இன்போடெக் மற்றும் அங்கூரான் அறக்கட்டளை ஆகியவை இணைந்து அமைத்துள்ள அங்கூரான் நவீன அறிவியல் மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டடத்தை திறந்து வைத்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில், எல்காட் மற்றும் ஹெச்சிஎல்டெக் நிறுவனங்களுக்கும் இடையே மதுரை, இலந்தைக்குளம் எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 2.41 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஹெச்சிஎல்டெக் நிறுவனம் 150 கோடி ரூபாய் முதலீட்டில் 1,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிட உள்ளது. இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, இ. பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மறு சீரமைக்கப்பட்ட வண்டியூர் பூங்கா – மீனாட்சி கல்லூரியில் கணினி திறன் மேம்பாட்டு மையம் –

# ரூ.1536.31 கோடியில் கூட்டுக் குடிநீர் திட்டம்!

## மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**மதுரை, பிப். 22 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2026) மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 1,536 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில், 10 இலட்சத்து 93 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலான 867 ஊரகக் குடியிருப்பு களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்து, 50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட வண்டியூர் பூங்கா, மதுரை மாநகராட்சி, கரிமேட்டில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கூரான் நவீன அறிவியல் மையம், 1 கோடியே 67இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

**மேலும், மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள HP கணினி திறன் மேம்பாட்டு மையம் மற்றும் வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப் படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, பணியாளர்களுக்கான குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், 150 கோடி ரூபாய் முதலீட்டில் 1,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் எல்காட் மற்றும் ஹெச்சிஎல்டெக் நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் முடிவுற்ற கூட்டுக் குடிநீர் திட்டப் பணியின் விவரங்கள்**

மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர், செல்லம்பட்டி, கள்ளிக்குடி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி ஆகிய 7 ஒன்றியங்களை சார்ந்த 867 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 10 இலட்சத்து 93 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 1,536 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**மறுசீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட வண்டியூர் பூங்கா திறப்பு**

மதுரை மாநகராட்சியில் வண்டியூர் கண்மாயின் வடக்கு மற்றும் மேற்கு கரைகளில் அமைந்துள்ள வண்டியூர் பூங்கா 50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டு முதலமைச்சர் அவர்களால் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த மறுசீரமைக்கப்பட்ட வண்டியூர் பூங்கா, நடைபயிற்சியாளர்களுக்கான நடைபாதை, மிதிவண்டிக்கான தனித்தடம், ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தனித்தனி தியான மையங்கள் மற்றும் யோகா மையங்கள், திறந்தவெளி அரங்கம், இயற்கை தானியங்கள் விற்பனை செய்யும் வகையில் 14 சிறு நிலையங்கள் (Kiosk), படகுசவாரி வசதிகள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், மின் விளக்குகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கழிவறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**அங்கூரான் நவீன அறிவியல் மையம் திறப்பு**

மதுரை மாநகராட்சியில் கரிமேட்டில் 12,000 சதுர அடி பரப்பளவில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பினாகிள் இன்போடெக் மற்றும் அங்கூரான் அறக்கட்டளை ஆகியவை இணைந்து அமைத்துள்ள அங்கூரான் நவீன அறிவியல் மையத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அனுபவ அறிவியல் கற்றல் மூலம் புதுமைகளை வளர்க்கும் வகையில் இந்த அறிவியல் மையத்தில், மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதத்தில் பரிசோதனைகளுக்கான ஆய்வகங்கள், மின் மற்றும் இயந்திர மாதிரிகள் மற்றும் ரோபோக்களை உருவாக்குவதற்கான வசதிகள், கணினி பயிற்சி போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகக் கட்டடம் திறப்பு**

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் மூலதன மானிய நிதி மற்றும் பொது நிதியின் கீழ், அரண்மனைக்காரர் தெருவில் 1 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடம் மற்றும் மன்ற கூட்ட அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் HP கணினி திறன் மேம்பாட்டு மையம் திறப்பு**

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள HP கணினி திறன் மேம்பாட்டு மையத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த திறன் மேம்பாட்டு மையம், மாணவர்களிடையே டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்துதல், கல்வி கற்றல் மற்றும் தொழில் துறை தேவைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்தல், நவீன கணினி உள்கட்டமைப்பு மற்றும் மென்பொருள் கருவிகளுக்கான அணுகலை வழங்குதல், தற்போதைய தகவல் தொழில்நுட்பத் துறை தரநிலைகளுடன் இணக்கமான திறன் மேம்பாட்டை ஆதரித்தல், தொழில் வாய்ப்புகளை மேம்படுத்த தொழில்நுட்பத் திறன்கள் கொண்ட மாணவியர்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த கணினி மையத்தில் உயர் செயல்திறன் கொண்ட 50 எண்ணிக்கையிலான HP டெஸ்க்டாப் கணினிகள், அதிவேக இணைய இணைப்பு, நவீன டிஜிட்டல் கற்றல் மென்பொருள் மற்றும் உற்பத்தித்திறன் கருவிகள், ICT அகாடமி மூலம் பயிற்சி ஆதரவு, கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் இரண்டையும் ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

---

### தேர்தல் பணியைப் பார்த்து பொறாமைப்பட்டு அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்கு!

# பொய் வழக்கை சட்டரீதியாக எதிர்கொண்டு தி.மு.க. முறியடிக்கும்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, பிப்.22–**

**அமைச்சர் கே.என்.நேருவின் தேர்தல் பணியைப் பார்த்துப் பொறாமைப்பட்டு பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. அந்த பொய் வழக்கைச் சட்டரீதியாக எதிர் கொண்டு தி.மு.க. முறியடிக்கும்! என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் (20.2.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது பேட்டி யளித்தார்.**

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்ததாவது: -

அமைச்சர் கே.என். நேரு அவர்கள் மீது சிபிஐ விசாரணை நடந்து கொண்டிருந்த போது, அமலாக்கத் துறை சில ஆவணங்களை எடுத்ததாகச் சொல்கிறார்கள். இதனைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் சிபிஐ வழக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த முக்கிய வழக்கை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. சிபிஐ வழக்கு ரத்து செய்யப்பட்டதால் அமலாக்கத்துறையிடம் போதிய ஆதாரங்கள் இல்லை



என்றாலும் அவர்கள் தமிழ்நாடு அரசை நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள், கே.என். நேரு அவர்களைக் கட்சியின் மூத்த தலைவர் என்றோ கழகத்தின் முதன்மைச் செயலாளர் என்றோ கூடப் பார்க்காமல் உடனடியாக லஞ்ச ஒழிப்புத் துறை மூலம் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டார். தற்போது அந்த விசாரணை நடைபெற்று வருகிறது.

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இன்பதுரை தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு அரசு ஏற்கனவே விசாரணை நடத்திக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளது. இது ஒன்றும் பின்னடைவு அல்ல, திமுகவின் சட்டத்துறை இதனைச் சட்டரீதியாகச் சந்தித்து முறியடிக்கத் தயாராக இருக்கிறது.

அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மீது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பல வழக்குகளை தொடுத்திருக்கிறார். அத்தனை வழக்குகளையும் எதிர்கொண்டு வென்று காட்டியவர்தான் கழக முதன்மைச் செயலாளர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்:

பா.ஜ.க. அரசு சிபிஐ மற்றும் அமலாக்கத்துறையை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தப்படுகிறது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களை நள்ளிரவில் கைது செய்து 100 நாட்கள் சிறையில் வைத்தும், மூன்று ஆண்டுகள் ஆகியும் அந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. கடந்த 2016-ல் லாரிகளில் பிடிபட்ட 570 கோடி ரூபாய் வழக்கில் 10 ஆண்டுகள் ஆகியும் சிபிஐ இது வரை முதல் தகவல் அறிக்கையைக் கூடப் பதிவு செய்யவில்லை. இவை அனைத்தும் தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் மற்றும் தி.மு.க.வின் இமேஜைக் கெடுப்பதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகள்.

அமைச்சர் நேரு தற்போது 41 தொகுதிகளுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது தேர்தல் பணியைப் பார்த்துப் பொறாமைப்பட்டு எடப்பாடி பழனிசாமியின் ஆலோசனையின் பேரில் டெல்லியில் இருப்பவர்கள் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இத்தகைய அச்சுறுத்தல்களுக்குப் பயப்பட மாட்டார்; தட்டத் தட்ட பந்து எழும்புவது போல இன்னும் தீவிரமாகப் பணியாற்றுவார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

---

### 2006 – 2011 ஆம் ஆண்டு கழக அரசு உருவாக்கிய

# கிழக்குக் கடற்கரை சாலையை - உலக வங்கியே பாராட்டியது!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

**சென்னை, பிப். 22 -**

**சட்டப்பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு பேசிய போது, கழக அரசில் சாலைகள் அமைப்பது பற்றிக் குறிப்பிட்டார்.**

**அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த செய்தித் துறை அமைச்சர் மு.பி. சாமிநாதன், "2006 2011 கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பட்ட கிழக்குக் கடற்கரை சாலையை உலக வங்கியே பாராட்டியது!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

*அமைச்சர் மு. பெ. சாமிநாதன் இது குறித்து குறிப்பிட்டதாவது :*

*எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும் போது சாலை அமைக்கிற*



*பணியைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதற்கான காரணம் அடிப்படை. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ஐயா கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடும், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடும் அன்றைக்கு சாலை அமைக்கப்பட்டதை பத்திரிக்கைகளும் பாராட்டியது; மக்களும் பாராட்டினார்கள். கிழக்குக் கடற்கரை சாலை நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரை 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கான உலக வங்கித் திட்டம். அது கிடப்பிலே கிடந்தது.*

*அன்றைக்கு அரசு அதனை செயல்படுத்தி, அதனை உலக வங்கியும் பாராட்டியிருக்கிறது. கேரள அரசின் முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை அன்றைக்கு தமிழ்நாட்டை பார்த்துவிட்டு வந்து, கேரளாவிலும் சாலை அமையுங்கள் என்று குறிப்பிட்ட கருத்தும் பத்திரிக்கைகளில் வெளி வந்திருக்கிறது. அந்த அடிப்படைக் கட்டமைப்புதான் அவருடைய ஆட்சிக்கான அந்த சூழ்நிலை உருவாகியது.*

*இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.*